சின்னதம்பி பெரியதம்பி

சின்னதம்பி : ஏண்ணே; தேர்தல் ஆணையத்தின் அந்தஸ்தை குறைக்கக் கூடாது என்று முன்னாள் தேர்தல் தலைமை ஆணையர்கள், பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்களாமே?

பெரியதம்பி : **ஆமாம் தம்பி; கடிதம் எழுதினாலும், முறையிட்டாலும், போராடினாலும், பிரதமர் மோடி கவலைப்படவா போகிறார்? அலட்சியத்தின் உச்சத்தில் இருப்பதால், எதிர்க் கருத்துகள், இடித்துரைகள் எதுவும், பிரதமரின் மனதிலோ, செவியிலோ ஏறாது !**

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், குடியரசுத் தலைவரின் அந்தஸ்தையே மதிப்பதில்லை; இந்த நிலையில், தேர்தல் ஆணைய அந்தஸ்தைப் பற்றிப் பேசுவதால் என்ன பயன்?

சட்டத் தொழிலின் அடிப்படையான

வழக்கறிஞர்களின் நேர்மையை பொறுத்தே தொழில் செழிக்கும்!

தலைமை நீதிபதி சந்திரசூட் பேச்சு!

சத்ரபதி சம்பாஜிநகர், செப். 19-

மும்பையில் நடந்த நிகழ்ச்சியில் உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி டிஒய். சந்திரசூட் பங்கேற்று பேசியதாவது:-

வழக்கறிஞர் நேர்மையாக நடந்து கொண்டால் தொழில் தொடர்ந்து செழிக்கும். வழக்கறிஞர்கள் நேர்மை, தர்மத்தை கடைப்பிடிக்காவிட்டால் சட்டத் தொழில் தானாக அழிந்துவிடும். வழக்கறிஞர்களால் உலகம் முழுவதையும் முட்டாளாக்க முடியும். ஆனால் அவர்களது மனசாட்சியை முட்டாளாக்க முடியாது. அது ஒவ்வொரு இரவும் அவர்களைக் கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கும்.

நேர்மையே சட்டத் தொழிலின் அடிப்படையாக உள்ளது. வழக்கறிஞர்கள் தொடர்ந்து நேர்மையுடன் வாழ்வோம். நீதிபதிகளை மதிக்கும் போது வழக்கறிஞர்களுக்கு மரியாதையும், வழக்கறிஞர்களை மதிக்கும் போது நீதிபதிகளுக்கு மரியாதையும் கிடைக்கும். இருவரும் நீதி சக்கரத்தின் ஒரு பகுதி என்பதை உணரும் போது தான் இந்த பரஸ்பர மரியாதை ஏற்படுகிறது.சட்ட அமைப்பில் பெண்களுக்கு பொருத்தமான குரல் கொடுப்பதை உறுதி செய்வது நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் பொறுப்பாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை

விளிம்பு நிலைப் பெண்களின் கைவிளக்கு!

உடோப்பியா (Utopia) எனும் ஆங்கில சொல்லுக்கு அனைத்து வசதிகளும் கொண்ட, துன்பங்களே இல்லாத கற்பனையான உலகம் என்று அர்த்தம். அப்படி ஒன்று சாத்தியமே இல்லை என்பதால் பொதுவாக நடக்கவே முடியாத நம்பிக்கைகளை Utopian என்று குறிப்பிடுவார்கள்.

ஆனால் அப்படிப்பட்ட கற்பனைகள் சாத்தியம்தான் என்று வாதிடுகிறார் டச்சு வரலாற்று அறிஞர் ரட்கர் பெர்க்மேன். அவரது Utopia for Realists எனும் புத்தகத்தில் தனது வாதங்களை அறிவியல்பூர்வ ஆதாரங்களுடன் முன்வைக்கிறார்.

அதற்கு அவர் சொல்லும் காரணிகளில் முக்கியமானது: இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை நடக்கவே நடக்காது இதெல்லாம் உடோப்பியா என்று ஒதுக்கப்பட்ட பல விஷயங்கள் இன்று நம்மிடையே சகஜமாக புழக்கத்தில் உள்ளன என்று சொல்கிறார்.

அவற்றில் சில:

பென்ஷன்
பெண் கல்வி
மண முறிவு
இலவச மருத்துவம்
வார விடுமுறை

என்று பட்டியல் போகிறது. ஏன், ஜனநாயகம் கூட மானுடப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக 17ம் நூற்றாண்டில் முன்வைக்கப்பட்ட போது 'இதெல்லாம் நடைமுறையில் வேலைக்காகாது பாஸ்!' என்று ஒதுக்கித் தள்ளி இருக்கிறார்கள். என்று மேற்கோள்கள் காட்டுகிறார்.

ஆனால் இன்றைக்கு ஜனநாயகம் இல்லாத நாடுகள்தான் அதிசயமாகவும் விதிவிலக்குகளாகவும் பார்க்கப்படுகிறது.

அதே போல இன்றைக்கு நடைமுறைக்கு ஒவ்வாதவை என்று பார்க்கப்படும் பல விஷயங்கள் வருங்காலத்தில் சாத்தியப்படப் போகிறது என்கிறார் அவர். அந்தப் பட்டியலில் அவர் குறிப்பிடும் முக்கிய விஷயம் Universal Basic Income. அதாவது அனைவருக்கும் குறைந்தபட்ச வருமான உத்திரவாதம்.

இதைச் சொல்லும் போதே பலரும் கசப்புடன் அதனை அணுகுகிறார்கள். ஆனால் அதுதான் நாளை நிதர்சனமாகப் போகிறது என்று உற்சாகத்துடன் பேசுகிறார். அதற்கான முனைப்புகளை பல்வேறு உலக நாடுகள் முன்னெடுத்திருக்கின்றன. இந்த குறைந்தபட்ச வருமான உத்திரவாதம் குறுகிய அளவில் அமல்படுத்தப்பட்ட நாடுகளில் விரைவான வறுமை ஒழிப்புக்கு வழி வகுத்திருக்கிறது, அச்சமூகங்களில் கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி இருக்கிறது என்பதற்கான ஆதாரங்களை அடுக்குகிறார்.

பல்வேறு விஷயங்களில் முன்னுதாரணமாக இருக்கும் தமிழ்நாடும் இப்படிப்பட்ட முனைப்புகளை எடுத்திருப்பது இந்திய அதிசயங்களில் ஒன்று. மகளிர் உரிமைத் தொகை அந்த முனைப்புகளில் ஒன்று. ரேஷன் அரிசி ரூபாய்க்கு மூன்று படி வழங்கப்படும் என்று ஆரம்பித்த கனவு, வளர்ந்து வளர்ந்து இன்று இலவசமாகவே 20 கிலோ வழங்கும் நிலைக்கு முன்னேறி இருக்கிறது.

நடைமுறை சாத்தியமே இல்லை எனும் கனவுகளை நிறைவேற்றியே தீருவேன் எனும் பிடிவாதத் தலைவர்கள்தான் சமூக மாற்றத்துக்கு வித்திடுகிறார்கள். அந்த நோக்கில் பெண்களுக்கு உரிமைத் தொகை என்று வழங்கும் திட்டம் முக்கியமானது என்று கருதுகிறேன்.

விளிம்பு நிலையில் வாழும் லட்சக்கணக்கான குடும்பங்கள் இதனால் பயன் பெறப் போகிறார்கள். ரேஷன், சத்துணவு என்று பல்வேறு திட்டங்களும் சிறிது சிறிதாக துவங்கி இன்று முழுக்கவும் வியாபித்தது. இந்தத் திட்டமும் கொஞ்சம் கொஞ்சமாக விரிவுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஒரு ஸ்வீகி ஆர்டருக்கே ஆயிரம் ரூபாய் செலவிடும் குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் வீரியம் புரிய வாய்ப்பில்லை. ஆனால் இரண்டாயிரம் ரூபாய்க்கு முறைவாசல் செய்யும் பெண்களுக்கு இது கண்டிப்பாக புரியும்.

பெண்களின் முன்னேற்றத்தில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து தேசத்துக்கே முன்னுதாரணமாக விளங்கும் மாநிலம் தமிழ்நாடு. அந்த வழியில் அடுத்த மைல்கல்தான் இந்த உரிமைத் தொகை. திட்டம் மாபெரும் வெற்றியடையவும் மேலும் விரிவுபடுத்தப்படவும் வாழ்த்துகிறேன். தமிழ்நாட்டு அரசுக்கு நன்றியும் அன்பும்.

ஸ்ரீதர் சுப்ரமணியம்

பக்தர்களின் குறைகளைப் போக்கிடும் வகையில்

1000 கோயில்களுக்கு குடமுழுக்கு!

'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப். 19-

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் தமிழகமெங்கும் 1000 கோவில்களுக்கு குடமுழுக்கு செய்து காட்டி மக்களின் மனதை கவர்ந்த நாயகனாக நிலைத்துள்ளார். தமிழ்நாடு இறை மாநிலமாகவே மாறிவிட்டது என 'தினத்தந்தி' முதல்வருக்கு புகழாரம் சூட்டி யுள்ளது.

அது வருமாறு:-

ஆயிரம் கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தி சாதனை படைத்த தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை பாராட்டுக்குரியது. தமிழ்நாடு ஒரு இறை மாநிலம் என்று சொன்னால் அது மிகையல்ல. ஆதிகாலத்தில் இருந்தே, "கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம், கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்று வழக்கு மொழிகள் தமிழ்நாட்டில் உண்டு. இன்றும் கூட கோவில்களை சுற்றியுள்ள தெருக்களுக்கு சன்னதி தெரு, மாட வீதி என்ற பெயர்கள் உண்டு. திருக்கோவில்கள் வழிபாட்டு தலங்களாக மட்டுமல்லாமல், பழமை வாய்ந்த தமிழர் பண்பாடு மற்றும் கட்டிடக்கலை முதலானவற்றை தன்னகத்தே கொண்டு ஓவியம், நடனம், இசை போன்ற கலைகளைக் காக்கும் களஞ்சியங்களாகவும் திகழ்கின்றன. ஒவ்வொரு கோவிலிலும், கோவில் கோபுரங்களிலும் இத்தகைய சிறப்புகள் கொண்ட சிற்பங்களையும், ஓவியங்களையும், கல்வெட்டுகளையும் காணலாம்.

தலையங்கம்

தினத்தந்தி

18.9.2023 (திங்கட்கிழமை)

ஆயிரம் கோவில்களில் கும்பாபிஷேகம்!

சமீபத்தில் டெல்லியில் நடந்த ஜி20 மாநாட்டு முகப்பில்கூட, சுவாமிமலையில் வடிவமைக்கப்பட்ட28 அடி உயர நடராஜர் சிலை வைக்கப்பட்டிருந்தது, வந்திருந்த அத்தனை வெளிநாட்டு தலைவர்களை யும் வெகுவாக கவர்ந்தது. அவர்கள் நடராஜர் சிலை முன்பு நின்று 'செல்பி' எடுத்துக்கொண்டனர். அவ்வளவு பெருமை வாய்ந்த தெய்வங்களுக்கு தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் 44 ஆயிரம் கோவில்கள் இருக்கின்றன. அந்தந்த கோவில்களுக்கென்று ஆகம முறைப்படி வழிபாடுகள் நடக்கின்றன. பொதுவாக 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும்.

பல கோவில்களில் அவ்வாறு நடத்தப்படவில்லை என்பது பக்தர்களுக்கு பெரும் குறையாக இருந்தது. அந்த குறையைப் போக்க கடந்த 26 மாதங்களாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார். பார்க்கவே பக்திபழமாக காட்சி அளிக்கும் அவர், தலைமை செயலகத்தில் இருக்கும் நேரத்தைவிட கோவில்களில்தான் அதிக நேரம் செலவிடுகிறார் என்றும், "அவர் சேகர்பாபு மட்டுமல்ல செயல்பாபு" என்று முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினால் பாராட்டப்பட்டவர். அவர் தலைமையின் கீழ் இந்து சமய அறநிலையத்துறை 7,400 கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்த திட்டமிட்டு செயலாற்றி வருகிறது. முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான கோவில்களை புனரமைத்து திருப்பணி மேற்கொள்ள, ஆட்சி பொறுப்பை ஏற்றவுடன் 2 பட்ஜெட்டிலும், தலா ரூ.100 கோடி மானியமாக வழங்க உத்தரவிட்டு இருந்தார். இந்த நிலையில், இந்து சமய அறநிலையத்துறை நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடத்தப்படாத பல கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தி, இறை பக்தி உள்ள மக்களின் மனதை குளிர்வித்தது.

எடுத்துக்காட்டாக, கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் கோவிலில் 400 ஆண்டுகளுக்கு பிறகும், காஞ்சீபுரம் மாவட்டம் சாத்தஞ்சேரி கரியமாணிக்க வரதராஜ பெருமாள் கோவிலில் 300 ஆண்டுகளுக்கு பிறகும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இந்த வரிசையில், தி.மு.க. அரசு பொறுப்பேற்ற இந்த 26 மாதங்களில் ஆயிர மாவது கும்பாபிஷேகம், மேற்கு மாம்பலத்தில் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த காசி விஸ்வநாதர் கோவிலில் நடந்தது. இந்த கோவிலை பக்தர்கள் வாரணாசியில் உள்ள விஸ்வநாதர் கோவிலாகவே போற்றி வழிபடுகிறார்கள். ஆயிரம் கோவில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்தி சாதனை படைத்த இந்து சமய அறநிலையத்துறை பாராட்டுக்குரியது. இதே வேகத்தில் 12 ஆண்டுகளுக்கு மேலாக கும்பாபிஷேகம் நடத்தப்படாத அனைத்து கோவில்களிலும் திருப்பணிகளை முடித்து கும்பாபிஷேகம் நடத்தி இறை நம்பிக்கையாளர்களின் உள்ளம் மகிழ செய்யவேண்டும் என்பது பக்தர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

இவ்வாறு 'தினத்தந்தி' தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை மக்கள் விரும்புகிறார்கள்!

தேர்தலைச் சந்திக்க காங்கிரஸ் கட்சித் தயார்!

காரிய கமிட்டி கூட்டத்தில் தீர்மானம்!

ஐதராபாத், செப். 19 -

'ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை மக்கள் விரும்புகிறார்கள். இதற்கான தேர்தலை சந்திக்க காங்கிரஸ் தயாராக உள்ளது" என காங்கிரஸ் கட்சியின் விரிவான காரிய கமிட்டி கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியின் 2 நாள் காரிய கமிட்டி கூட்டம் ஐதராபாத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாள் கூட்டத்தில், 'மக்களை பிளவுபடுத்தும் அரசியலில் இருந்து நாட்டை விடுவிக்கவும், மக்களை புரிந்து கொள்ளும், பொறுப்பேற்கும் அரசை பெறுவதை உறுதி செய்வதற்கும், இந்தியா கூட்டணியை வெற்றிக் கூட்டணியாக்கும்' என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து, 2வது மற்றும் கடைசி நாளான நேற்று விரிவான காரிய கமிட்டி கூட்டம் நடந்தது.இதில் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுனகார்கே, கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவர் சோனியா, முன்னாள் தலைவர் ராகுல், பொதுச் செயலாளர் பிரியங்கா உள்ளிட்ட காரிய கமிட்டி உறுப்பினர்கள் மட்டுமின்றி, கட்சியின் மாநில தலைவர்கள், சட்டமன்ற காங்கிரஸ் கட்சி தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில், இந்த ஆண்டு இறுதியில் நடக்க உள்ள தெலங்கானா, ராஜஸ்தான், சட்டீஸ்கர், மத்தியபிரதேசம், மிசோரம் மாநில சட்டப்பேரவை தேர்தல் குறித்து விவாதிக்கப்பட்டது. அம்மாநில தலைவர்கள் தேர்தல் வியூகம் மற்றும் முன்னேற்பாடுகள் குறித்த விரிவான அறிக்கையை சமர்ப்பித்தனர். மேலும், 2024 மக்களவை தேர்தலுக்கான கட்சியின் தயார்நிலை குறித்தும் விவா திக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தில், 'விரைவில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் சட்டீஸ்கர், மத்தியப் பிரதேசம், மிசோரம், ராஜஸ்தான் மற்றும் தெலங்கானா மக்களிடம் இருந்து காங்கிரஸ் தீர்க்கமான வெற்றியை பெறும் என நம்பிக்கை கொண்டுள்ளோம். தேர்தலை சந்திக்க காங்கிரஸ் முழுமையாக தயாராக உள்ளது. நாட்டு மக்கள் மாற்றத்தை விரும்பு கின்றனர். சட்டம், ஒழுங்கு, சுதந்திரம், சமூக மற்றும் பொருளாதார நீதி, சமத்துவம் பற்றிய அவர்களின் எதிர்பார்ப்புகளை நாங்கள் நிறைவேற்று வோம்' என கூறப்பட்டுள்ளது.

தெலங்கானா மக்களுக்கு 6 தேர்தல் வாக்குறுதி!

காரிய கமிட்டி கூட்டத்தைத் தொடர்ந்து, துக்குகுடாவில் காங்கிரசின் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடந்தது. இதில் பேசிய, கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, தெலங்கானா சட்டப்பேரவைக்கான காங்கிரசின் 6 தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்தார்.

★மகாலட்சுமி திட்டத்தின் கீழ் தெலங்கானா பெண்களுக்கு மாதம் ரூ.2,500 நிதி உதவி, மாநிலம் முழுவதும் அரசு நகர பேருந்துகளில் இலவச பயணம் மற்றும் ரூ.500க்கு காஸ் சிலிண்டர் வழங்கப்படும்.

★விவசாயிகளுக்கு ஆண்டு தோறும் ரூ.15,000 நிதி உதவி

★ மாணவர்களுக்கு ரூ.5 லட்சம் கல்வி உதவித் தொகை

★ வீடில்லாதவர்களுக்கு வீட்டு மனை மற்றும் ரூ.5 லட்சம் நிதி உதவி

★அனைத்து வீடுகளுக்கும் 200 யூனிட் இலவச மின்சாரம்

★ முதியோருக்கு மாதம் ரூ.4000 ஓய்வூதியம். வாக்குறுதிகளை அறிவித்து பேசிய சோனியா, "இந்த 6 வாக்குறுதிகளையும் நாங்கள் நிச்சயம் நிறை வேற்றுவோம். தெலங்கானா மாநிலம் உதயமாவதில் ஒரு அங்கமாக இருப்பதற்கான வாய்ப்பு கிடைத்த எங்களுக்கு, இப்போது மாநிலத்தை புதிய உச்சத்திற்கு உயர்த்தும் கடமையும் வந்துள்ளது. சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்காகவும் உழைக்கும் காங்கிரஸ் ஆட்சி தெலங்கானாவில் அமைய வேண்டும் என்பது எனது கனவு" என்றார்.

பா.ஜ. வலையில் சிக்க வேண்டாம்!

நேற்று நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் ஊடகம் மற்றும் விளம்பரத் துறைத் தலைவர் பவன் கேரா, "காரிய கமிட்டியில் நேற்று முன்தினம் பேசிய ராகுல் காந்தி, கட்சி தலைவர்கள் அனைவரும் சித்தாந்தத் தெளிவைக் கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை குறிப்பிட்டார். பாஜவின் பொறியில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டுமென எச்சரித்த ராகுல், சாமானிய மக்களின் பிரச்னையில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார்" என்றார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு (17.09.2023) அன்று சென்னை, திருவல்லிக்கேணி, திருவேட்டீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.72.80 லட்சம் மதிப்பீட்டிலான புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணியை தொடங்கி வைத்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் என்.சிற்றரசு, சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, மண்டல குழு தலைவர் எஸ்.மதன்மோகன், செயல் அலுவலர் திருமதி கங்காதேவி. மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலைமை: டி.பி.எம்.மைதீன்கான்!

நெல்லை மாநகரக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை.செப்.19-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி நெல்லை மாநகர கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாநகர அலுவலகத்தில் இன்று (19.9.2023 - செவ்வாய்க் கிழமை) மாலை 6 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப் பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் நடைபெறுகிறது.என மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

நெல்லை மாநகர கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாநகர அலுவலகத்தில் வைத்து இன்று 19ஆம் தேதி மாலை 6 மணி அளவில் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் துணை செயலாளர் அப்துல் கையூம் பகுதி செயலாளர்கள் சுப்பிர மணியன்(தச்சை) அன்டன் செல்லதுரை(பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் வரவேற்புரையாற்றுகிறார்

நிறைவில் பொருளாளர் அண்ணாதுரை நன்றி உரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: BLC பட்டியலை சரி செய்து தொடர்பாக, "மக்களைத்தேடி திமுக" நிகழ்வை பற்றி ஆலோசனை, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.